Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 479/2018 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW5 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | டாக்டர் திருமங்கை |
| Father's Name | – | க/பெ செந்தில்குமார் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 13th October 2023.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

A1 to A3 present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது வேட்டைக்காரன் அரசு மருத்துவமனையில் தலைமை மருத்துவராகப் பணிபுரிந்துவருகிறேன். கடந்த 09.09.2017 ம் தேதி அதிகாலை பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் அலுவலில் இருந்தபோது சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டம் தாரமங்கலம் அம்பேத்கர் நகரைச் சேர்ந்த கார்த்திகேயன் சிகிச்சைக்காக வந்தார். நான் விசாரிக்க 08.09.2017 ம் தேதி காலை சுமார் 09.30 மணிக்கு நெகமம் காவல் நிலைய சரகம் கொ.காளியாபுரம் வெள்ளியங்கிரி வீட்டு முன்பாக வைத்து தாக்கிவிட்டதாக சொல்லி சிகிச்சைக்குச் சேர்ந்தார். நான் அவரை உள்ளிருப்பு நோயாளியாக அனுமதித்தேன். அவருக்கு இடது கால் மூட்டில் வலி இருப்பதாகச் சொன்னார். பின்பு 11.09.2017 ம் தேதி சிகிச்சை முடிந்து வீட்டுக்குச் சென்றுவிட்டார். அவர்க்கு ஏற்பட்ட காயம் சாதாரணகாயம் என கருத்துடன் கூடிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று வழங்கினேன். அந்த காயச் சான்றிதழ் **அசாஆ 4** ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

காயம்பட்ட நபர் தனியாகத்தான் மருத்துவமனை வந்தார். அவர் வரும்போது சுயநினைவுடன்தான் இருந்தார். அவர் கூறிய விபரத்தைதான் நான் பதிவு செய்தேன் என்றால் சரிதான். அவர் மது அருந்தவில்லை, அதனால் அதற்கான சோதனை மேற்கொள்ளவில்லை. அசாஆ.4 ஆவணத்தில் யார் அடித்தார்கள் என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவர் அதைக் கூறவில்லை என்றால் சரிதான். மழை பெய்யும் சமயத்தில் வீட்டு வாசலில் வழுக்கி விழுந்தால் இது போன்ற காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr. E.Pragasam.,B.A.B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.